உ

திருத்தணி கேசர் துணை

# வேல் மாறல்

## திரு முருகன்

# மனமுருகு விண்ணப்பம்



தொகுப்பாசிரியர்

**கலாபூஷணம் நாகமணிவிநாயகமூர்த்தி**

சேனைக்குடியிருப்பு, கல்முனை.

05-10-2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை



*விக்னேஸ்வராயநமக*

*காப்பு*

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கர தாமரை நாயகன்
அடக சக்கர விண்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவான்

# வேல் மாறல் திருமுருகன் மனமுருகு விண்ணப்பம்

தொகுப்பாசிரியர்
புலவர் நாகமணிவிநாயகமூர்த்தி

சேனைக்குடியிருப்பு,கல்முனை
05-10-2019

விலை 300



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனதுரை

*விழிக்குத்துணைதிரு மென்மலர் பாதங்கள் மெய்மைகுன்றா*
*மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்பு செய்த*
*பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி*
*வழிக்குத் துணைவடி வேலுஞ் செங் கோடன் மயுரருமே.*

பெரியோர்களே!

இந்த வேல் மாறல் தென்னிந்திய வள்ளிமலை திருபுகழ் சச்சிதானந்த சுவாமி அவர்கள் அருணகிரிநாத சுவாமிகள் பாடியருளிய வேல் வகுப்பிள். 16 பாடல்களை 64 பாடலாக்கி அதற்கு வேல் மாறல் என்று பெயர் நாமம் வைத்துள்ளார். இதைப்பாரயணம் செய்வதற்கு முன்னும் பின்னும் பாடவேண்டிய பாடல்களை சுவாமிகள் வகுத்துத் தந்துள்ளார்கள்.

மேலும் இதைப்பரயாணம் செய்யும் அன்பர்களுக்கு கிரகப்பகை ஏவல், வைப்பு, சூனியம் முதளியன அகன்று போவது மட்டுமல்லாமல் உடற்பிணி, உளப்பிணி போக்கி மனதை ஒரு நிலைப்படுத்த வல்லது. இரவு பகல் தனிமையிலும் பிரயாணத்தின் போதும் வேல் துணை தரும் என்பதாகும். வேல் மாறல் சிறிய புத்தகத் திருப்புகழ் பராயணத் தொகுதி ஒன்றை அடியேனின் குருநாதர் மேண்மை தங்கிய வள்ளிமலைப் பேராளர் உயர் திரு பாலநந்த சுவாமி அவர்கள் அடியேனுக்குத் தந்தருளியதை தாங்களும் பராயணம் செய்து பயன் அடைவீர்கள் என நம்புகிறேன்.

அடியார்களே!
தொண்டன் சி.சிவலிங்கம் ஐயா அவர்கள் இயற்றிய நமச்சிவாய மாலை முருகன் மனமுருகு விண்ணப்பம் எனும் பாடல் போட்டோ பிரதி ஆக்கம் அம்பிகாபதி எனும் அன்பர் என்னிடம் கையளித்தார். இதை கண்ணுற்றபோது ஐயாவின் அழிந்த படமும் நற்சிந்தனை என்று கீழும் மங்கிய நிலையில் நமச்சிவாய மாலையும் இரு பாகங்களாக மனமுருகு விண்ணப்பம் எனும் புத்தகத்தைக் கண்டேன். ஏன் உங்களின் நாமத்தை போட்டு இருக்கின்றீர்களே என வினவினேன் ஐயா என்னை மன்னித்து கொள்ளுங்கள் என்று கூறி சென்று விட்டார். அவர் கையளித்த முருகன் மனமுருகு விண்ணப்பத்தையும், மேற்கூறிய வேல் மாறலையும் சேர்த்து இதற்கு, வேல் மாறல் திருமுருகன் மனமுருகு விண்ணப்பம் என நாமம் சூட்டி தங்களிடம் சமர்ப்பித்திருக்கின்றேன். தாங்களும் படித்துப்பயன் பெறுவீராகவும்.

-வணக்கம்-

இவ்வண்ணம்
ஸ்கந்த முருகன் அடியான்
நாகமணிவிநாயகமூர்த்தி

சேனைக்குடியிருப்பு
05-10-2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வேல் மாறல்

தனத்ததன தனத்ததன தனத்ததன தனத்ததன
தனத்ததன தனத்ததன தனத்ததன தானா

திருத்தணியி லுதித்தருளுமொருத்தன்மலை விருத்தனென
துளத்திலுறை கருத்தன்மயினடத்துகுகன் வேலே

01. பருத்தமுலை சிறுத்தவிடை வெளுத்தநகை கறுத்தகுழல்
சிவத்த விதழ் மறச்சிறுமி சிரிக்கு நிகராகும் -திரு

02. திருத்தணியிலுதித்தருளுமொருத்தன்மலை விருத்தனென -திரு
துளத்திலுறை கருத்தன்மயினடத்துகுகன் வேலே

03. சொலற்கரிய திருப்புகழை யுரைத்தவரை யடுத்தபகை
யறுத்தெறிய வுறுக்கியெழு மறத்தை நிலை காணும் -திரு

04. தருக்கிநமன் முருக்கவரினெருக்குமதி தரித்தமுடி
படைத்தவிறல் படைத்தவிறை கழற்குநிக ராகும் -திரு

05. பனைக்கைமுக படக்கரட மதத்தவள கஜக்கடவுள்
பதத்திடநி களத்துமுளை தெறிக்கரவும் மாகும் -திரு

06. சினத்தவுணரெதிர்தரண களத்தில்வெகு குறைத்தலைகள்
சிரித்தெயிறு கடித்துவிழி விழித்தலற மோதும் -திரு

07. துதிக்குமடி யவர்க்கொருவர் கொடுக்கவிடர் நினைக்கினவர்
குலத்தைமுதலறக்களையுமெனக்கோர்துணை யாகும் -திரு

08. தலத்திலுள கணத்தொகுதி களிப்பினுண வழைப்பதென
மலர்க்கமல கரத்தின்முனை விதிர்க்கவளை வாகும் -திரு

வேல் மாறலை ஒரே ராகத்திலும், அல்லது பல ராகங்களிலும் அவரவர்கள் வசதிப்படிப் பாராயணம் செய்யலாம். ஒவ்வொரு பாடல் முடிவிலும் திரு என்ற இடத்தில் திருத்தணியில் உதித்தருளும் ஒருத்தன்மலை விருத்தன் என துளத்தில் உறை கருத்தன் மயில் நடத்துகுகன் வேலே - என முழு பாடலையும் பாடவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. பழுத்தமுது தமிழ்ப்பலகை யிருக்குமொரு கவிப்புலவ
னிசைக்குருகி வரைக்குகையை பிடித்துவழி காணும் -திரு

10. திசைக்கரியை முதற்குலிசனறுத்தசிறை முளைத்ததென
முகட்டினிடை பறக்கவற விசைத்ததிர வோடும் -திரு

11. சுடர்பரிதி யொளிப்பநில வொழுக்குமதியொளிப்ப அலை
யடக்குதழலொளிப்பவொளி ரொழிப்பிரபை வீசும் -திரு

12. தனித்துவழி நடக்குமென திடத்துமொரு வலத்துமிரு
புறத்துமரு கடுத்திரவு பகற்றுணைய தாகும் -திரு

13. பசித்தலகை முசித்தழுது முறைப்படுதலொழித்தவுண
ருரத்துதிர நிணத்தசைகள் புசிக்கவரு ணேரும் -திரு

14. திரைக்கடலை யுடைத்துநிறை புனற்கடித்துகுடித்துடைய
முடைப்படைய வடைத்துதிர நிறைத்துவிளை யாடும் -திரு

15. சுரர்க்குமுனீ வரர்க்குமக பதிக்கும்விதி தனக்குமரி
தனக்கநரர் தமக்குமுறு மிடுக்கண்வினை சாடும் -திரு

16. சலத்துவருமருக்கருடல் கொழுதுவளர் பெருத்தகுடர்
சிவத்ததொடை யெனச்சிகையில் விருபமோடு சூடும் -திரு

17. சுவர்குமுகி வாரர்க்குமக பதிக்கும்விதி தனக்குமரி
தனக்குநரர் தமக்குமுறு மிடுக்கண்வினை சாடும் -திரு

18. சலத்துவருமரக்கருடல் கொழுத்துவளர் பெருத்தகுடர்
சிவத்ததொடை யெனச்சிகையில் விருப்பமொடு சூடும் -திரு

19. பசித்தலகை முசித்தழுது முறைப்படுத லொழித்தவுண
உரத்துதிர நிணத்தசைகள் புசிக்கவரு ணேரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. திரைக்கடலை யுடைத்துநிறை புனற்கடிது குடித்துடைய
முடைப்படைய வடைத்துதிர நிறைத்துவிளை யாடும் -திரு

21. சுடர்ப்பரிதி யொளிப்பநில வொழுக்குமதி யொளிப்பஅலை
யடக்குதழலொளிப்பவொளிரொளிப்பிரபை வீசும் -திரு

22. தனித்துவழி நடக்குமென திடத்துமொ ருவலத்துமிரு
புறத்துமருகடுத்திரவு பகற்றுணைய தாகும் -திரு

23. பழுத்தமுது தமிழ்ப்பலகை யிருக்குமொரு கவிப்புலவ
னிசைக்குருகி வரைக்குகையை யிடித்துவழி காணும் -திரு

24. திசைக்கிரியை முதற்குலிசனறுத்தசிறை முளைத்ததென
முகட்டினிடை பறக்கவற விசைத்ததிர வோடும் -திரு

25. துதிக்கும்மடி யவர்க்கொருவர் கெடுக்கவிடர் நினைக்கினவர்
குலத்தைமுதலறக்களையு மெனக்கோர்துணை யாகும் - திரு

26. தலத்திலு கணத்தொகுதி களிப்பினுண வழைப்பதென
மலர்க்கமல கரத்தின்முனை விதிர்க்கவளை வாகும் -திரு

27. பணைக்கைமுக படக்கரட மதத்தவள கஜக்கடவுள்
பதத்திடுநி களத்துமுளை தெறிக்கவர மாகும் -திரு

28. சினத்தவுணரெ திர்த்தரண களத்தில்வெகு குறைத்தலைகள்
சிரித்தெயிறு கடித்துவிழ விழித்தலற மோதும் -திரு

29. சொலற்கரிய திருப்புகழை யுரைத்தவரை யடுத்தபகை
யறுத்தெறிய வுறுக்கியெழு மறத்தைநிலை காணும் -திரு

30. தருக்கிநமன் முருக்கவரினெருக்குமதி தரித்தமுடி
படைத்தவிறல் படைத்தவிறை கழற்குநிக ராகும் -திரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. பருத்தமுலை சிருத்தவிடை வெளுத்தநகை கறுத்தகுழல்
சிவத்தவிதழ் மறச்சிறுமி விழிக்குநிக ராகும் -திரு

32. திருத்தணியிலு தித்தருளுமொ ருத்தன்மலை விருத்தனென
துளத்திலுறை கருத்தன்மயினடத்துகுகன் வேலே -திரு

33. தருக்கிநமன முருக்கவரினெ ருக்குமதி தரித்தமுடி
படைத்தவிறல் படைத்தவிறை கழற்குநிக ராகும் -திரு

34. சொலற்கரிய திருப்புகழை யுரைத்தவரை யடுத்த பகை
யறுத்தெறிய வுறுக்கியெழு மறத்தைநிலை காணும் -திரு

35. திருத்தனியிலு தித்தருளுமொ ருத்தன்மலை விருத்ததென
துளத்திலுறை கருத்தன்மயினடத்துகுகன் வேலே -திரு

36. பருத்தமுலை சிருத்தவிடை வெளுத்தநகை கறுத்தகுழல்
சிவத்தவிதழ் மறச்சிறுமி விழிக்குநிக ராகும் -திரு

37. தலத்திலுள கணத்தொகுதி களிப்பினுண வழைப்பதென
மலர்க்கமல கரத்தின்முனை விதிர்க்கவளை வாகும் -திரு

38. துதிக்கும்படி யவர்க்கொருவர் கொடுக்கவிடர் நினைக்கினவர்
குலத்தைமுதலறக்களையுமெனக்கொள் துணை யாகும் -திரு

39. சினத்தவுணரெதிர்த்தரண களத்தில்வெகு குறைத்தலைகள்
சிரித்தெயிறு கடித்துவிழி விழித்தலற மோதும் -திரு

40. பனைக்கமுக படக்கரட மதத்தவளை கஜக்கடவுள்
பதத்திடுநி களத்துமுளை தெறிக்கவர மாகும் -திரு

41. தனித்துவழி நடக்குமென திடத்துமொரு வலத்துமிரு
புறத்துமரு கடுத்திரவு பகற்றுணைய தாகும் -திரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. சுடர்ப்பரிதி யொளிப்பநில வொழுக்குமதி யொளிப்பஅலை
யடக்குதழலொளிப்பவொளி ரொளிப்பிரபை வீசும் -திரு

43. திசைக்கிரியை முதற்குலிசனறுத்தசிறை முளைத்ததென
முகட்டினிடை பறக்கசற விசைத்ததிர வோடும் -திரு

44. பழுத்தமுது தமிழ்ப்பலகை யிருக்குமொரு கவிப்புல
னிசைக்குருகிவரைக்குகையை யிடித்துவழி காணும் -திரு

45. சலத்துவருமரக்கருடல் கொழுத்துவளர் பெருத்தகுடர்
சிவத்ததொடை யெனச்சிகையில் விருப்பமோடு சூடும் -திரு

46. சுரர்க்குமுகி வரர்க்குமக பதிக்கும்விதி தனக்குமரி
தனக்குநிகர் தமக்குமுறு மிடுக்கண் வினை சாடும் -திரு

47. திரைக்கடலை யுடைத்துநிறை புனற்கடித்து குடித்த்துடையு
முடைப்படைய வடைத்துதிர நிறைத்துவிளை யாடும் -திரு

48. பசித்தலகை முசித்தழுது முறைப்படுத்த லொழித்தவுண
ருரத்துதிர நிணத்தசைகள் புசிக்கவரு ணேரும் -திரு

49. திரைக்கடலை யுடைத்துநிகை புனற்கடித்து குடித்த்துடையு
முடைப்படைய வடைத்துதிர நிறைத்துவிளை யாடும் -திரு

50. பசித்தலகை முசித்தழுது முறைப்படுத்த லொழித்தவுண
ருரத்துதிர நிணத்தசைகள் புசிக்கவரு ணேரும் -திரு

51. சலத்துவருமரக்ருடல் கொழுத்துவளர் பெருத்தகுடர்
சிவத்ததொடை யெனச்சிகையில் விருப்பமோடு சூடும் -திரு

52. சுவர்குமுகி வாரர்க்குமக பதிக்கும்விதி தனக்குமரி
தனக்குநரர் தனக்குமுறு மிடுக்கண்வினை சாடும் -திரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53. திசைக்கிரியை முதற்குலிசன றுத்தசிறை முளைத்ததென
முகட்டினிடை பறக்கவற விசைத்ததிர வோடும் -திரு

54. பழுத்தமுது தமிழ்ப்பலகை யிருக்குமொரு கவிப்புல
னிசைக்குருகிவரைக்குகையை யிடித்துவழி காணும் -திரு

55. தனித்துவழி நடக்குமென திடத்துமொரு வலத்துமிரு
புறத்துமரு கடுத்திரவு பகற்றுணைய தாகும் -திரு

56. சுடர்பரிதி யொளிப்பநில வொழுக்குமதியொளிப்ப அலை
யடக்குதழலொளிபபவொளி ரொழிப்பிரபை வீசும் -திரு

57 சினத்தவுணரெதிர்த்தரண களத்தில் குறைத்தலைகள்
சிரித்தெயிறு கடித்துவிழி விழித்தலற மோதும் -திரு

58. பனைக்கமுக படக்கரட மதத்தவள கஜக்கடவுள்
பதத்திடுநி களத்துமுளை தெறிக்கவர மாகும் -திரு

59. தலத்திலுள கணத்தொகுதி களிப்பினுண வழைப்பதென
மலர்க்கமல கரத்தின்முனை விதிர்க்கவளை வாகும் -திரு

60. துதிக்கும்படி யவர்க்கொருவர் கொடுக்கவிடர் நினைக்கினவர்
குலத்தைமுதலறக்களையுமெனக்கொர் துணை யாகும் -திரு

61. திருத்தணியிலு தித்தருளுமொ ருத்தன்மலை விருத்தனென
துளத்திலுறை கருத்தன்மயினடத்துகுகன் வேலே -திரு

62. பருத்தமுலை சிறுத்தவிடை வெளுத்தநகை கறுத்தகுழல்
சிவத்தவிதழ் மறச்சிறுமி விழிக்குநிக ராகும் -திரு

63. தருக்கிநமன் முருக்கவரினெருக்குமதி தரித்தமுடி
படைத்தவிறல் படைத்தவிறை கழற்குநிக ராகும் -திரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

64. சொலற்கரிய திருப்புகழை யுரைத்தவரை யடுத்த பகை
யறுத்தெறிய வுறுக்கியெழு மறத்தைநிக ராகும் -திரு

திருத்தணியிலுதித்தருளுமொருத்தன்மலைவிருத்தனென
துளத்திலுறை கருத்தன்மயினடத்துகுகன் வேலே
(இதையே 12 முறை ஓதவும்)

உ
வேலும் மயிலும் துணை

தடக்கொற்ற வேள்மயிலே! யிடர் தீரத் தனிவிடில்நீ
வடக்கிற் கிரிக்கப் புறத்துநின் றேகையின் வட்டமிட்டுக்
கடற்கப் புறத்துங் கதிர்கப் புறத்துங் கனகசக்ரத்
திடர்க்கப் புறத்துந் திசைக்கப் புறத்துந் திரிகுவையே.

*வேலும் மயிலும் துணை*



நாள் என் செய்யும் வினைதான் என் செய்யும் எனை நாடி வந்த
கோள் என் செய்யும் கொடுங் கூற்றன் என் செய்யும் குமரேசர் இரு
தாழும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடினே.

-சுப-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு முருகன் மனமுருக விண்ணப்பம்

ஆக்கம்: தொண்டன் சி. சிவலிங்கம்

காப்பு

*முருகன் மன உருக முக்கண்ணா வுன்னை*
*அருகில் வைத்தேன் அரண்*

நூல் 1ம் பாகம்

நாவுக்கிசைந்ததே பாவாகும் எனினும் கூட்டுப் பிரார்த்தனை
போலிசைத்தல் நன்று

1 முருகா முருகா - முருகா முருகா
முருகா முருகா - வருவாய் முருகா

2 வருவாய் முருகா - வடிவேல் முருகா
திருவே முருகா (என்) வடிவேல் முருகா

3 அப்பா முருகா - அழகா முருகா
இப்போ முருகா (எனக்கு) எதிர்வா முருகா

4 முருகா முருகா - முதல்வா முருகா
உருகாய் முருகா - உம்பர் முருகா

5 வா வா முருகா - மாயோன் மருகா
தேவா முருகா (என்) திருவே முருகா
வேல் வேல் முருகா வெற்றி வேல் முருகா

6 அழுதேன் முருகா என்னை அணைப்பாய் முருகா
தொழுதேன் முருகா என் துயர்நீர் முருகா

7 மால் சேர் முருகா - மண்டூர் முருகா
பால் போல் உள்ளம் எனக்கு படைப்பாய் முருகா

8 குற்றில் ஆடும் - குமார முருகா
கன்று காலி - காத்தா முருகா

9 அப்பருக்கு முத்தி - அளித்த முருகா
இப்போ எனக்கு - எதிர்வா முருகா

10 மலைமக ளீன்ற - மகனே முருகா
அலைகடல் துயிலும் - அண்ணலே முருகா

11 முருகா முருகா - வருவாய் முருகா
வருவாய் வருவாய் - வடிவேல் முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12 உள்ளும் புறமும் - ஒழிசோர் முருகர்
துள்ளும் மயிலைத் - துதித்தேன் முருகா
13 அம்மை இருவர் - அணைத்த முருகா
இம்மையாலென்னை - எடுத்தாள் முருகா
14 அருண கிரியை - அணைத்த முருகா
கருனை தந்து நீ காப்பாய் முருகா
15 தேவர் துயரைத் - தீர்த்த முருகா
மூவரும் ஒன்றென - முடிந்த முருகா
16 வலியுள கோளெனை - வாட்டுதே முருகா
கலியுகத் தெங்கும் - கண்கண்ட முருகா
17 அம்மையும் அப்பரும் - ஆன நல் முருகா
இம்மையும் வறுமையும் - என்னையாள் முருகா
18 சுழியிலே வந்து - தேற்றிடும் முருகா
அழியா நிலையை - அளிப்பாய் முருகா
19 கானக்குறத்தி - களிக்கும் முருகா
வானகத்தோரால் - வாழ்த்தும் முருகா
20 ஓங்கார துள்ளே - ஒலிக்கும் முருகா
நீங்கா வினைகளை - நீக்கும் முருகா
21 அப்பரோடம்மை - அயர்ந்தே போக
முப்பொருளுரைத்த - முதலே முருகா
22 வானவர் வந்து - வணக்கம் கூறி
ஆனந்துதித்த - அருளே முருகா
23 அப்பா முருகா - அழகா முருகா
இப்போ முருகா (எனக்கு) எதிர்வா முருகா
24 அயனும் அஞ்சி - அயர்ந்தே ஓட
யெஜயெஜ வென்று - ஜெயித்த முருகா
25 மாங்கனிக்காக - மயில்மீதேறி
நீங்கா திருத்த - நிலையே முருகா
26 ஏலோடு எட்டில் - இருக்குஞ்சனியில்
தாழ்ப்பணிந்தாலும் - தஞ்சங் காணேன்
27 ஆறு இரண்டில் - அமர்ந்த குருவும்
நீறு பூத்த - நெருப்பேயானால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28 நாறும மலரால் - நான்துதித்திடவே
தேறும் வகையைத் - தருவாய் முருகா (நான்)
29 பாம்பு ரெண்டும் - பாவிகளாகித்
தேம்பியளவே - செய்தால் முருகா (என்னை)
30 ஓங்கி வளரும் ஒழியாலென்னைத்
தாங்கி யெடுத்தாள் - தருவே போற்றி
31 என் வினையேதோ - உன் மனங்கல்லோ
மன்மத ரூபா - மயிலேறும் முருகா
32 ஏக்கங் கொன்டேன் - எங்குதான் செல்வேன்
தூக்கி எடுத்துத் துணைதா முருகா (என்னை)
33 பத்தும் பறந்து - பாவி போல் மடியச்
சித்தந்தானோ என் திருவே முருகா
34 உள்ளமே நொந்து - உன்னைத்துதித்தாலும்
கள்ள மனமே - காட்டுராய் முருகா
35 பிள்ளையென் றென்னைப் - பேணிவளர்த்திட
அள்ளி யெடுத்து - அணைப்பாய் முருகா
36 எண்ணெண் கலையும் - ஏகாந்த நிலையும்
மண்ணிலே தந்து - மகிழவை முருகா
37 ஆறுபடை வீடும் - ஐம்பத்தாறு அட்சரமும்
நாரும் உடலுக்கு - நல்காயோ வேல் முருகா
38 மணிபூரகத்தே - மங்கா திருந்து
பணிபல புரியும் - பண்பார் முருகா
39 இருவினை கொண்டு - இம்மையிலாடி
வருவழி யேதோ - வடிவேல் முருகா (எனக்)
40 நாட்டிலுள்ளோர் - நகைபல பேசி
ஆட்டி வைத்தல் - அழகோ முருகா (என்னை)
41 அள்ளிக் கொடுக்கும் - அகமிருந்தாளும்
உள்ளந்துடித்தேன் - உலகாள் முருகா (நான்)

*முருகா முருகா - மனம் உருகாய் முருகா*
*வருவாய் முருகா - வடிவேல் முருகா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42 பொன்கிளி - யீர்ந்தார் புலவரென்று
என்கிளி தருவாய் - எனக்கு நீ முருகா
43 கார்த்திகைப்பெண்கள் - கண்டுகளித்த
மூர்த்திபோல் வந்து -முறைகேள் முருகா '
44 ஆறெழுத்தாலே - அவனியையாள
வேறெவர் க்குண்டு - வேல்வேல் முருகா
45 புத்திரரின்றி - புலம்பினோர்க்கு
சித்தம் மகிழச் - செய்தாய் முருகா
46 இத்தனை நாளாய் - என்னை நீ மறந்து
நித்திரை செய்தல் - நீதியோ முருகா (இன்றும்)
47 பெற்ற தாயும் - பேரிடுந் தந்தையும்
ஆற்ற நிலையுடன் - அலைந்தேன் முருகா (நான்)
48 புத்தெனும் நகரில் - போகா திருக்க
எத்தனை யுகந்தான் - எடுக்குமோ முருகா (இன்றும்)
49 ஆயிரம் கோடி - அன்பர்க ளுன்மேல்
பாயிரம் பாடும் - பண்பார் முருகா
50 மகாதெசை எங்கும் - மங்கிக் கிடந்தால்
தாகாதெனச் சொல்லத் - தகுமோ முருகா
51 முப்பொருளாலே - மூழ்கித்தியங்க
அப்பருக்கேனோ - அளித்தாய் முருகா (நீ)
52 இந்திரன் மகர்க்குச் - சிந்தையளித்து
சுந்தர மயில்மேல் - தோற்றினாய் முருகா
53 கந்த மலரால் - கண்ணீர் சொரிந்து
வந்தனை செய்தால் - வருவாயோ முருகா (நீ)
54 உன்னருளின்றி - உலகத்திலிருக்க
என்மனமில்லை - எழில்சேர் முருகா
55 எல்லாம் நீ தான் - என்றே யிருந்தால்
கல்லாய் மரமாய்க் - காட்சிதா முருகா

*முருகா முருகா - (மனம்) உருகாய் முருகா*
*வருவாய் முருகா - வடிவேல் முருகா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56 முக்கண்ணன் தம்பி - முருகனுண்டானால்
இக்கணம் என்முன் - எழுந்துவா முருகா
57 இல்லையென்று நானும் - சொல்லாமலே யிருக்கத்
தில்லை வழி விட்டுத் - திரும்பி வருவாய் முருகா
58 எல்லாம் வழியும் - இடுக்கண்ணாக்கி வைத்து
கொல்லாமலே கொல்லல் - குணமோ முருகா
59 தண்ணீர் லுப்பு - தானிருப்பது போல்
கண்ணீர் சொரிந்தேன் - காட்சிதா முருகா (நான்)
60 அன்னப் போலம்மை - அருகாயிருக்க
என் முன் வாருவாய் - எழிசேர் முருகா (நீ)
61 ஊமை போலுன்னை - உள்ளத்திருத்தி
ஆமையாயிருக்க ( நீ) அருள்வாய் முருகா
62 உச்சி குளிர - உள்ளம் மகிழ
பச்சை மயிலில் - பறந்துவா முருகா
63 முருகா முருகா - (மனம்) உருகாய் முருகா
வருவாய் முருகா - வடிவேல் முருகா
64 வாயாரநானும் - வாவென் றழைத்தால்
பாயாத மானைப் - பார்பாயோ முருகா
65 ஓயாமலுன்னை - உச்சரித்தாலுங்
காயான பழத்தைக் காட்டாதே முருகா (எனக்கு)
66 மண்ணாசை போக்கும் - மருந்தாக வந்தால் நீ
பண்ணோசை எனக்குப் - படைப்பாயோ முருகா
67 பூவாவது காய்த்துப் - பூவுலகில் உண்டானால்
சாவாது காக்கச் - சாலிப்பாயோ முருகா
68 உகந்த மலை மேலே - ஏளியாக நீ இருந்து
காந்தமென விழுந்துக் - காராயேநீ முருகா (என்னை)
69 சண்முகங் காட்டிச் -சமரசக் கை நீட்டி
விண்ணிலெடுத்தாழ் - விரைந்தோடிவா முருகா
70 சுட்டம் பழ மீந்தாய் - துடுக்காக நீயிருந்து
விட்டகுறை நீக்க - விரைந்தோடி வா முருகா (நான்)
71 உலகத்தில் நானிருக்க - உன்னருளுக்கேலுமென்றால்
பல புத்தியில்லாமல் - பண்ணாயோ நீ முருகா (எனக்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

72 என்னசெய்வேறென்று - ஏங்கி மனம் துடித்தேன்
வன்ன மயிலேறி - வரமருள்வா முருகா (நல்ல)
73 இரவு பகலாகி - எங்குமிருப்பது போல்
கனவு மறைவின்றிக் - காராயோ நீ முருகா (என்னை)
74 அண்ணார்ந்த பயிர் போல் - ஆகாயம் பார்த்திருந்து
புண்ணாகி நோதல் - போதாதோ முருகா (நான்)
75 முல்லைவள நாடு - முருகனுக் கென்றாலும்
எல்லை கடந்திங்கே - இன்று வருவாய் முருகா (நீ)
74 அன்ன நடை போடும் - அம்மையிரு வரொடு
வண்ணமயிலேறி - வாராயோ நீ முருகா
75 மங்கை வள்ளிக்காக - மரமாகி நின்றாற்போல்
எங்கள் குலந்தளைக்க - என்று வருவாய் முருகா
76 அவுணர்குல மழிய -அன்றெடுத்த வேலோடு
மவுன மெனக் கீய - மயிலேறி வா முருகா
77 கொல்ல மனங் கொண்ட - கொடுஞ்சூர பத்மனுந்தான்
நல்ல மயிலானான் - நானாகாதோ முருகா(உனக்கு)
78 எங்கெங்குசென்றாலும் - என்னெதிரேயுன்னுருவம்
மங்கா திருக்கநீ - மறுப்பாயோ வேல்முருகா
79 கதிரைமலைக் கருகே - கண்டுகளிப்பதற்கு
கதியெனக்குத் தந்து - காராயோ நீ முருகா
80 முருகா முருகா - (மனம்) உருகாய் முருகா
வருவாய் முருகா - வடிவேல் முருகா
81 ஆறெழுத்தைக் கூற - மாறும்வினை முழுதும்
நீ றெடுத்துச் சொன்னேன் - நீ வருவாய் வேல்முருகா
82 என்னிதயத்துள்ளே - இருக்க மனமிருந்தால்
பன்னிருகை வேலேந்திப் - பறந்தோடிவா முருகா (நீ)
83 அம்புலியைத்தொட்டார் - அவனிதனி லுள்ளோர்கள்
தும்பி முகன் தம்பி நீ - துணைபுரிய வாமுருகா
84 கலியால் நலியக் - காணாமலே யிருந்து
பலியாக்கிக் கொல்லப் -பாராயோ நீ முருகா(என்னை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

85 பண்ணோடு ஓசை - பாட்டில் அமைவதுபோல்
கண்ணாலே கருணை - காட்டாயோ நீ முருகா (நீ)
86 கள்ளிறக்கி யுண்ணும் - காலம் வருமளவும்
எள்ளுக்குள் எண்ணெயென - இருப்பாயோ நீ முருகா
87 சந்தியிலே நின்று சரிகை நூலாட்டுதற்கு
உந்தி தனிலிருந்தே - ஒழிகாட்டு நீ முருகா
88 ஓங்கார வட்டமதில் - உன்னொளியைக் கண்டிருக்க
ஆங்காரம் போக்கி - அருளாயே நீ முருகா (எந்தன்)
89 சோம வட்ட மெனக்குத் - தோற்றாமலே யிருக்கத்
தாமெதமெனக்கூறித் - தடுக்காதே நீ முருகா
90 கத்திரிக்கோல் மாற்றம் - கருத்தாலே கண்டிருக்க
எத்தனை காலம் - எடுக்குமோ என் முருகா (இன்னும்)
91 ஏற்றம் இறக்கம் - எதுவுமறியாது
தோற்றந்தா வென்றால் - தோசமோ வேல் முருகா
92 ஞாயிறு திங்கள் - நானறிய மாட்டாமல்
வாயீறுகச் சொன்னால் - வருவாயோ நீ முருகா
93 காற்றோட்ட மென்று - காதாரக் கேளாமல்
நூற்பய னென்றால் - நோகாதோ வேல் முருகா
94 எல்லாம் அடங்கி - எடுக்க வரும் போதினிலே
நல்ல மயிலேறி - நான்காண வா முருகா
95 ஐயமது மீறி - அறிவிழந்து போகாமல்
கையளித்து என்னை - காராயோ வேல் முருகா
96 என்னாவி போக - எதிரே வரு முடலும்
என்னாகு மென்று - எடுத்தோது நீ முருகா
97 எத்தனை சென்மம் - எடுத்தாலும் உன்னடியைச்
சித்தமதில் வைக்கச் - செய்வாயோ நீ முருகா
98 மயிர்ப் பாலங் கண்டு - மனமுடைந்து போகையிலே
உயிர்காக்கவென்று - உடனோடி வா முருகா
99 முருகாவென்றுன்னை - முழுமனமாய்க் கூறிடவே
அருகே யிருந்து தென்னை - ஆதரிப்பாய் வேல்முருகா
100 நூறுநூறாக - நூலெழுதி நான் துதிக்க
தோறும் வகை யெனக்குத் - தேடிவைப்பாய் நீமுருகா

முருகா முருகா - (மனம்) உருகாய் முருகா
வருவாய் முருகா - வடிவேல் முருகா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு முருகன் மனமுருக விண்ணப்பம்

## இரண்டாம் பாகம்

(இது காதல் போலவும் இசைக்கலாம்,அம்மானை போலவும் பாடலாம்)

101 ஆறுங்கருவில் - அமைந்தா யறுமுகனே
மாரும்படி யமைக்க - மயிலேறி வா முருகா
102 உண்ண இறைச்சி - உரித்துக்கொடுத்தே வைத்த
கண்ணப்பன் கண்டான் - கழலடியைத்தாமுருகா
103 என்னால் இறைச்சி - எடுத்து ஈயக்கூடாது
உன்னாசை கொண்டேன் - உடனோடி வாமுருகா
104 அறுத்துக் கோடுத்தான் - சிறு தொண்ட அன்பனுக்கு
வெறக்காமலேனையாள - விரைந்தோடி வாமுருகா
105 அன்னை கருவில் - அடையாமலேயிருக்க
உன்னடியைத் தொட்டேன் -உடனோடி வாமுருகா
106 இடைகலை பின்கலை - இருக்குமிடந் தோணாது
மடையனைப்போலானேன் - மயிலேறி வாமுருகா
107 உள்ளோடு புறமூச்சை - உள்ளளவும் நானறியேன்
துள்ளும் மனமொடுங்கித் துணைபுரிய வாமுருகா
108 கண்ணப்பர் நம்பி - கண்டார்க ளுங்களையும்
மண்ணி லெடுத்து - வாராயோ நீ முருகா
109 உள்ளம் வெளுத்து - உன்னையே காண்பதற்கு
புள்ளி மயிலேறிப் - புறப்பட்டுவா முருகா
110 நாசி முனை பார்க்க - நானறியேன் ஞாலமதில்
வசியேடுத்தாட்ட - வாராயோ நீ முருகா
111 கண்ணொளியின் - முன்னே காணந் தெரிந்தாட
விண்ணின் மணியே நீ - விரைந்தோடி வாமுருகா
112 உச்சியி பள்ளம் - உண்டாகி நீ மருந்து
வச்சியிருந்தாலெடுத்து - வாராயோ நீ முருகா
113 செத்தாரைப்போல - தினமுந் திரியாமல்
வித்தாரங் கொண்டுடால் - வெறுப்பாயோ நீ முருகா
114 ஆடியடங்கும் - அம்பரத்தின் பம்பரம்போல்
ஓடிஅலுத்தேன் - உயிர்காக்க வாமுருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

115 சரஹணபவா வென்று - சாற்றினேன் நீறெடுத்து
அரவணையும் மால்முருகா - அரு˙கோடி வாமுருகா
116 பொருளில்லையென்று - புலம்பாமல் நானிருக்க
அருளெனக்குத்தந்து - ஆளாயோ நீ முருகா
117 மறுபிறவி யெனக்கு - வாராமல் காப்பதற்கு
உறுதிவளியைக் கூற - உடனோடி வாமுருகா
118 இப்பிறப்பிலுன்னை - இறுகப் பிடியாமல்
தப்ப விடேனிங்கு - தான் வருவாய் நீ முருகா
119 நாலுபடி தாண்டி - நடுவளியை தான் தாண்டி
பால்போலுளம் படைக்கப் - பறந்தோடி வாமுருகா
120 பத்தாம் படிதனிலே - பாதாரவிந்த மதை
கர்த்தாவே காட்டியெனைக் - காராயோ நீ முருகா
121 ஏகாதசந் தன்னில் - எல்லாந் தெரிந்தாலும்
போகாம லெனையாளப் - புறப்பட்டு வா முருகா
122 பன்னிரெண்டில் வந்து - பாம்பிரெண்டு மொன்நாகிப்
பின்னிப் படுக்கையிலே - பேசாயோ நீ முருகா
123 எல்லாம் மறைந்து - இகபரங்க ளொன்றாகினால்
சொல்லா திருக்கச் - சுகந்தருவாய் நீ முருகா
124 வில்லம்பெடுத்து வேடர் குல மாகாமல்
சொல்லம்பெடுத்தேன் - துணைபுரிய வாமுருகா
125 கண்ணுன் மணிலிருந்து - காட்சியளிப்பதுபோல்
விண்ணின் மணியே நீ - வேலேந்தி வா முருகா
126 பாழாயுடலம் - பதங்கெட்டலையாமல்
ஆளாக்க வெண்ணி - அருள்புரிய வாமுருகா
127 கோடான கோடி - குற்றந்தான் செய்தாலும்
வாடாமுகங் கொண்டு வரமருள வா முருகா
128 அன்னை வெறுத்தால் - அவனி தனி லாரணைப்பார்
வன்னமயிலேறி - வரமருள வா முருகா
129 தந்தை சினத்தால் - தாரணி தனி லாருதவி
வந்தனை வெய்தேன் - வரமருள வா முருகா

*முருகா முருகா - (மனம்) உருகாய் முருகா*
*வருவாய் முருகா - வடிவேல் முருகா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

130 அம்மை தெய்வாணை - அருகே யிருந்தாலும்
முப்முறையுந் துதித்தேன் - முறைகேளு நீ முருகா
131 சிற்றடையா ராசை - நீர்க்கும் மருந்து தந்து
மற்பொருது மார்பா நீ - மயிலேறி வா முருகா
132 பெண்ணா ரெனக்குப் - பேருலகின் தாயெனவே
பண்ணாலே பாடம் பதந்தருவாய் வேல்முருகா
133 புண்ணாகி நெஞ்சம் - புவியிலலையாமல்
விண்ணிலே நீயிருந்தால் - விரைந்தோடி வா முருகா
134 உண்ணாமல் நானும் - உபவாசஞ செய்தாலும்
மண்ணாசை போக்க - மயிலேறி வா முருகா
135 கண்ணே மணியே - கற்கண்டே யென்று உனை
எண்ணித் துதித்தேன் - எதிரோடி வாமுருகா
136 பிள்ளையுள்ளங் கொண்டு - பேருலகில் நானிருக்க
கள்ள மனம் போக்கிக் - கருணை நீ தா முருகா
137 எண்ணம் பெரிது - இயல்போ அதில் சிக்காமல்
வன்னமயிலேறி - வரமருள வா முருகா
138 உண்ண உணவளித்து - உயிராக நீயிருந்து
பணணோசை யூட்டப் பறந்தோடி வாமுருகா
139 கச்சை கட்டி நானும் - காசினியோர் கண்ணெதிரே
பிச்சை யெடுத்தாலும் - பேசாயோ வேல்முருகா
140 பிச்சை யெடுத்தாலும் - பெருமை பலர் பேசாது
இச்சை தணிக்க நீ - எதிரோடி வாமுருகா
141 அரனெடுத்துப் பிச்சை - அதன் பின் நானெடுத்தால்
மரபு குறையாது - மயிலேறி வா முருகா
142 துன்பத்தா ரென்னைத் - தூக்க மனமிருந்தால்
இன்பத்தர வெனக்கு - இன்று வருவாய் முருகா
143 இன்னலுக்கோ ரெல்லை - இருந்தா லிமைப்பொழுதில்
வண்ணமயிலேறி - வாராயோ வேல்முருகா
144 ஒன்றுமறியாது - ஊமையைப்போலேயிருந்தால்
என்று உனைக்காண - எதிர்வருவாய் வேல்முருகா
145 உன்னை நினைத்து - ஓடியலையாமல்
வண்ணமயிலேறி - வரமருள வா முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

146 சாண் சாணென்று - சாத்திரஞ் சொன்னதெல்லாம்
வீணெண்றிருந்தேன் - விரைந்தோடி வா முருகா
147 பட்டணத்தாரின் - பசியாலுனைத்துதித்து
வெட்டையாய்ப் போனதிப்போ - விரைந்தோடி வா முருகா
148 அன்பே சிவமென்று - அறியாதார் யாவருமில்லை
எள்போ உருகு திப்போ - எதிரோடி வா முருகா
149 அப்பனுக்கு உள்ள அன்பு - அமையாமலேயிருந்தால்
முப்புரமெரித்தோரின் - முழு மணியே நீ முருகா
150 அப்பம் அவள் கடலை - அண்ணணுக்கே வேணுமென்றால்
இப்போ உனக்கு எதுவேண்டும் சொல் முருகா
151 தேங்கா யுடைகத் - திருவருளாகு மென்றால்
ஏங்காம லென் செய்வேன் - எதிரோடி வா முருகா
152 கற்பூரம் தண்ணில் - காணாமல் போவது போல்
பொற்பாதங் காணப் - புறப்பட்டு வா முருகா
153 விற்போரறியேன் வேலெடுக்க நானுணரேன்
அற்றேனுதவி - ஆதரிக்க வா முருகா
154 மாயவுடலை - மதியாமலெ யிருக்க
ஓயாமலே தொழுதேன் - ஓடிவருவாய் வேல்முருகா
155 இவ்வுலகில் வந்துநான் - எதுவுமே கண்டதில்லை
கவ்வும் வினையகற்றிக் - காராயோ வேல்முருகா
156 முப்பழமும் பாழும் - முறையாப்படைப்பதற்குக்
கைப்பொருளோயில்லை - கருணை தர வா முருகா
157 எப்பிழையைச் செய்தாலும் - எல்லாம் மறந்திருந்து
தப்ப வழிகாட்டித் - தருகுவாய் நீ முருகா
158 புலையுங் கொலையுங் - பொல்லாத நெஞ்சமும்
தொலைய வழிகாட்டித் - தருவாய் நீ முருகா
159 உடலோடு நிழல் கூட -ஒட்டியிப்பது போல்
கடனோடு நானிருந்தேன் கடாட்சிதர வா முருகா
160 அக்கரையின் பச்சை - அழகாயிருக்கி தென்று
இக்கரையை விட்டேன் - எதிரோடி வா முருகா
161 ஆங்காரம் கொண்டு - அலைந்து திரியாமல்
ஓங்கார வேலெடுத்து ஓடி - வா நீ முருகா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

162 நன்மை தீமையோடு - நடுநிலைமை நானறிய
வண்ணமயிலேறி - வரமருள வா முருகா
163 மன்னன் அரிச்சந்திரன் - மாநிலத்தை ஆண்டாலும்
என்ன பாடு பட்டார் - எடுத்தோது நீ முருகா
164 நாடாண்ட மனன்ன் - நடுச்சுடலை காத்திருந்து
வாடாமல் எனையாள வருவாயே நீ முருகா
165 அப்பர் மாணிக்கர் -அழகான சுந்தரும்
எப்படியுனை அடைந்தார் - எடுத்தோது நீ முருகா
166 எல்லாத் துயரமும் - எதிரே வரும் இன்பமென்று
சொல்லாமல் சொல்லிச் - சுகந்தருவாய் நீ முருகா
167 வாது பண்ணினாரெனக்கு - வாடி வருத்திடவே
ஏது செயவேன் என்று - எடுத்தோது நீ முருகா
168 நல்லாரிணக்கம் - நானறிய மாட்டாமல்
பொல்லாங்கு செய்தால் - பொறுப்பாயோ நீ முருகா
169 அம்பதும் ரெண்டும் - ஆனபிற கெனக்கு
உன்பதங் காட்டாமல் - ஒழியாதே வேல்முருகா
170 காலை யுச்சிமாலை காசினியில் ஆனதினால்
வாலை வள்ளியோடு - மயிலேறி வா முருகா
171 ஓரிடத்தில் வீடு - உனக்கில்லை ஆனதினால்
சேருமிடமெங்கே தேடிவர நான் முருகா
172 வாலறுந்த வட்டம் - வானவழியிலேறுது போல்
மான் மகளையும் கூட்டி - மயிலேறி வா முருகா
173 கைப்பொருளோயில்லை - கண்டார் தலைசைக்க
மெய்ப்பொருளைக் காட்டி - விரைந்தோடி வாமுருகா
174 உன்னை நினைத்தால் (எனக்கு) ஒன்றுந்தெரிவதிலை
என்ன குணமென்று - எடுத்தோது நீ முருகா
175 மூலத்தில் அண்ணன் - முன்னேயிருந்தாழும்
பாலன்எனைக்காக்க - பறந்தோடி வா முருகா
176 ஆறா தாரம் - அங்கங்கமைந்தாலும்
நாறா மலர் கொண்டு - நான் துதிக்க வா முருகா
177 சூக்கு மத்தி லென்னை -தூக்கி யமைப்பதற்கு
மூக்கு நுனி பார்க்கும் - முறை கூற வா முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

178 மனம் வாக்கென்றும் - மாறாமலேயிருக்க
தினந் துதித்தேன்னுன்னை - தேடிவா நீ முருகா
179 அம்புவியில் நானும் - அலைந்தே திரியாமல்
வெம்பசியைத் தீர்க்க - விரைந்தோடி வாமுருகா
180 கூப்பிட்டழைத்துக் - கும்பிட்டேன்னுன்பாதம்
ஆப்பிட்டுக்கொண்டேன் - அருள்புரிய வாமுருகா
181 என்னெண்ண மெல்லாம் - என்றோ தெரிந்தாலும்
உன்னருளைக் காணேன் - உடனோடி வாமுருகா
182 அன்பர் மனதில் - அசையாதிருந்தாலும்
மின்பொழுதிலிங்கே - வினைதீர்க்க வாமுருகா
183 அம்மையிரு பக்கம் - அணைந்யேிருந்தாலும்
இம்மொன்னு முன்னே - உழுந்தோடி வாமுருகா
184 நாய்போல நாளும் - நாட்டிலலையாமல்
தாய்போலெனைளாத் - தயங்காதே வேல் முருகா
185 பேய்போலத் திரிந்து - பெருமை குலையாமல்
சேய் போலெடுத்து - சேராயோ வேல்முருகா
186 பண்டாரமாகிப் - பழனியில் நின்றாலும்
மன்றாடும் என்னை - மறக்காதே நீமுருகா
187 கோழிக்கொடியைக் - கொண்டவடிவேலவனே
தாழினடி யெனக்குத் - தரவருவாய் வேல்முருகா
188 தில்லை மண்டுரில் - தினந்துதிக்க நீயிருந்தும்
முல்லைநில மன்னா - முறைகேட்க வாமுருகா
189 விண்ணப்பமீது - வினவ மறுக்காதே
உண்ணாப்பசியிருக்க - உயிர்போக்கு வேல்முருகா
190 நானழிந்து போனால் - ஞாலம் தளைக்காதா
கோனழிந்தாயென்ற - குறைசேரும் வேல்முருகா
191 கட்டை போல் கிடந்து - கண்டோர் பழிக்காமல்
வெட்டை வழிகாட்ட - விரைந்தோடி வாமுருகா
192 அஞ்சுஙகெட்டு - நான் அறிவிழந்து பேகையிலே
கஞ்சமலர்பாதங் - காட்டாயோ வேல்முருகா
193 யமதூதர் வந்து - பயமுருத்தும் வேளையிலே
அமர்பொருத மார்பாநீ - அருங்கோடி வாமுருகா
194 காலனைக்கண்டு - கண்கலக்கம் கொள்ளாமல்
வேல் எடுத்த கையோடு - விரைந்தோடி வாமுருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

195 உன்னையன்றி எனக்கு - உலகத்திலார் துணையோ
வண்ணமயிலேறி - வரமருள வா முருகா
196 சந்தையிலே கூட்டம் - தான்வந்து கலைவதுபோல்
மந்தையாப் பிறந்தேனே - மயிலேறி வா முருகா
197 மக்கள் மனைவியரும் - மாறாத் துயர்கொண்டு
எக்காலந் தானிருப்பார் - எடுத்தோது வேல்முருகா
198 செத்தபின் சீவன் - சிவனாக மாறுமென்ற
புத்தியெடுத்தோதப் - புறப்பட்டு வாமுருகா
199 குறையெடுத்துச் சொன்னேன் - குற்றந்தனைப் பொறுத்து
கறை நீக்கி என்னைக் - காராயோ வேல்முருகா
200 இருநூறுஞ் சொன்னேன் - இரங்கும் மனதுடனே
அருகாக வந்தென்னை - ஆளாயோ வேல்முருகா
201 ஒன்று முணரேன் - உனக்கெடுத்துச் சொன்னதெல்லாம்
நன்றோ தீதோ - நானறியேன் வேல்முருகா
202 காலந் தவறிக் கடும்பசியால் வாடாமல்
ஞாலம் தழைக்க வழி - நல்காயோ வேல்முருகா
203 அந்தணரோடு - அவனிதனிலுள்ளோர்கள்
பந்தமற்று வாழப் - பண்ணிவைப்பாய் வேல்முருகா
204 குலதரும மென்றுங் - குன்றாமலேயிருக்க
மலர் தூவித்தேனையா - மயிலேறி வா வேல்முருகா
205 முவேந்தரோடு - முறைமுறையிலுள்ளோர்கள்
பூவேந்திப் போற்றப் - புண்ணியஞ் செய் முருகா
206 படித்தோர் கேட்டோர் - பக்கத்திலேயிருந்தோர்
பிடித்தே னுதடியைப் - பெறவழி செய்வேல்முருகா
207 பிடித்தால் எடுத்துரைத்தேன் - பிழைகள்தனைப் பொறுத்து
முத்தாரமாக்காயோ - முழுமணியே நீமுருகா
208 ஐங்கரன் வாழி - அரன் வாழி அம்மையெனும்
மங்கையுமையோடு - மாயோன் மனைவாழி
209 சரமசர மெல்லாம் - சண்முகனைக் கண்டுதொழ
வரமளித்துக்காக்கும் - வடிவேல் முருகா
210 வேல்முருகன் வாழி - வேலேந்தும் கைவாழி
சேர் விழியார் தங்கனெடு - சேர்ந்த மயில் தான் வாழி

சுபம்

திரு முருகன் மனமுருகு விண்ணப்பம் முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேல் விருத்தம்

வெங்காள கண்டர்கைச் சூலமும் திருமாயன்
வெற்றிபெறு சுடர் ஆழியும்
விபுதர்பதி குலிசமும் சூரன் குலங்கல்லி
வெல்லா எனக் கருதியே
சங்க்ராம நீஜயித் தருள் எனத் தேவரும்
சதுர்முகனும் நின்றிரப்பச்
சயிலமொடு சூரன்உடல் ஒருநொடியில் உருவியே
தனிஆண்மை கொண்ட நெடுவேல்
கங்காளி சாமுண்டி வாராகி இந்திராணி
கௌமாரி கமலா ஸனத்
கன்னிநா ரணிகுமாரி திரிபுரை பயி ரவிஅமலை
கௌரி காமாட்சி சைவ
சிங்காரி யாமளை பாவாநிகார்த்தி திகை கொற்றி
த்ரியம்பகி அளித்த செல்வச்
சிறுவன் அறு முகன்குமாரன் நிசிசரர் குலாந்தகன்
செம்பொற் றிருக்கை வேலேச்

வேதாள பூதமோடு காளிகா ளாத்ரிகளும்
வெகுளுறு பசாச கணமும்
வெங்கழு குடன் கொடி பருந்துசெம் புவனத்தில்
வெம்பசி ஒழிக்க வந்தே
ஆதார கமடமும் கணபண வியாளமும்
அடங்கிய தடர்கிரி எலாம்
அலையநடம் இடுநெடுந் தானவர் நிணத்தசை
அருந்திப் புரந்த வைவேல் .
தாதார் மரர்ச்சுனைப் பழநிமலை சோலைமலை
தனிப்பரங் குன்றே ரகம்
தணிகைசெந் தூரிடைக் கழி ஆவி னன்குடி
தடங்கடல் இரங்கை அதனிற்
போதார் பொழிற்கதிர் காமத் தலத்தினைப்
புகழும்அவ ரவர் நாவினிற்
புந்தியில் அமர்ந்தவன் கந்தன் முருகன் குகன்
புங்கவன் செங்கை வேலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விக்டரி அச்சகம். 0771597347

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org